# மரியாள்

## உயிருள்ள உடன்படிக்கையின் பேழை



அ.அல்போன்ஸ்
திருச்சி

அன்பின் மடல்

# உயிருள்ள உடன்படிக்கையின் பேழை

அ.அல்போன்ஸ்
திருச்சி

நமது விசுவாசத்தில் மிகவும் மகிமைமிக்க இரகசியங்களுள் ஒன்று மரியாளின் விண்ணேற்றம் ஆகும். ‘‘விண்ணேற்றம்’’ என்பது மரியாள் தனது பூமி வாழ்வை முடித்தபின், உடலோடும் ஆன்மாவோடும் பரலோக மகிமைக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டார் என்ற விசுவாச உண்மையாகும். இது ஒரு சாதாரண நிகழ்வு அல்ல; மனித வரலாற்றின் மீட்சித் திட்டத்தில் கடவுள் மனித குலத்திற்குத் தரும் இறுதி நம்பிக்கையின் முன்னோட்டமாகும். மரியாள் ஒரு பெண் மட்டுமல்ல; ‘‘இறைவனின் தாய்’’ (லூக்கா 1:43), ‘‘அருளால் நிறைந்தவள்’’ (லூக்கா 1:28), ‘‘புதிய ஏவாள்’’ என்றும் திருச்சபையால் போற்றப்படுகிறாள். ஆதாம் மற்றும் ஏவாளின் கீழ்ப்படியாமையால் உலகிற்குள் நுழைந்த பாவம் மற்றும் மரணம், இயேசுவின் கீழ்ப்படிதலால் மீட்கப்பட்டது. அதேபோல், ஏவாளின் எதிர்மறை நிலைக்கு எதிராக, மரியாள் தனது ‘‘ஆம்’’ என்ற கீழ்ப்படிதலால் மீட்சியின் கதவைத் திறந்தார். ஆகவே, பாவத்தின் களங்கமின்றி வாழ்ந்த அந்தத் தாய், மரணத்தின் அழிவிற்குள் நிரந்தரமாக விடப்படவில்லை; அவர் விண்ணக மகிமைக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

**‘‘ஆம்’’ என்று தொடங்கிய விண்ணகப் பயணம்**

மரியாளின் விண்ணேற்றம் அவரது வாழ்க்கையின் இறுதியில் தொடங்கியதல்ல; அது நாசரேத்தில் அவர் கூறிய ஒரு சிறிய வார்த்தையில் தொடங்கியது.

''நான் ஆண்டவரின் அடிமை; உம்சொற்படியே எனக்கு நிகழட்டும்'' *(லூக் 1:38)*

இந்த ''ஆம்'' என்பது மனித வரலாற்றின் மிகப்பெரிய கீழ்ப்படிதல்.

இந்த எண்ணத்தில் மரியாள்:

- மனித வரலாற்றின் மிகப்பெரிய ''ஆம்''
- கடவுள் மனிதனாக வர அனுமதித்த வாசல்
- தெய்வீகத்தை உலகிற்கு தாங்கிய அமைதியான ஆலயம்

ஆகிறார்.

**முதல் கனியாக மரியாள்**

விண்ணேற்றம் என்பது மரியாளின் மகிமை மட்டுமல்ல; அது மரணத்தின் மீது கடவுள் பெற்ற வெற்றியின் அடையாளம். இயேசு உயிர்த்தெழுந்ததன் மூலம் மரணத்தின் கதவுகளை உடைத்தார். அந்த உயிர்த்தெழுதலின் முதல் கனியாக மரியாள் விண்ணக மகிமையில் பங்குபெற்றார்.

''இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார். அனைவரும் உயிருடன் எழுப்பப்படுவர் என்பதை உறுதிப்படுத்துகிறது''

*(1 கொரிந்தியர் 15:20)*

ஏவாள் பாம்பின் வார்த்தையை நம்பினாள்;

மரியாள் தூதரின் வார்த்தையை நம்பினார்.

ஏவாள் மரத்தின் அருகில் வீழ்ந்தாள்;

மரியாள் சிலுவையின் அருகில் உறுதியாக நின்றார்.

ஏவாள் மனிதனை இழந்தாள்;

மரியாள் மனித குலத்தை மகனிடமே அழைத்துச் சென்றார்.

இதனால் மரியாளின் விண்ணேற்றம் என்பது ஒரு தனிப்பட்ட பரிசு மட்டுமல்ல; அது புதிய மனிதகுலத்தின் வெற்றியின் அறிகுறி.

**சிலுவையிலிருந்து விண்ணகத்துக்கு**

மரியாளின் வாழ்க்கை துன்பமற்றதாக இல்லை. இயேசுவின் பிறப்பிலிருந்து சிலுவை வரை அவர் துன்பத்தின் பாதையில் நடந்தார். சிமியோன் கூறியதுபோல்:

‘‘உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்’’ என்றார்..’’ *(லூக்கா 2:35).* அந்த வாள் தாயின் இதயத்தில் தினமும் ஆழ்ந்தது. பெத்லகேமின் ஏழ்மை, எகிப்தில் அகதி வாழ்க்கை, பன்னிரண்டு வயதில் இயேசுவை இழந்த வேதனை, மக்கள் முன் மகன் நிராகரிக்கப்பட்டது, இறுதியில் சிலுவையில் மகன் இறப்பதைப் பார்ப்பது — இவை அனைத்தும் மரியாளின் உள்ளத்தை உடைத்தன.

**விண்ணக அரசி**

விண்ணேற்றத்திற்குப் பிறகு மரியாள் ‘‘விண்ணக அரசி’’ என்று போற்றப்படுகிறார். ‘‘அவர் கதிரவனை ஆடையாக அணிந்திருந்தார்; நிலா அவருடைய காலடியில் இருந்தது; அவர் பன்னிரு விண்மீன்களைத் தலைமீது சூடியிருந்தார்.’’ *(திருவெளிப்பாடு 12:1).*

இந்தக் காட்சி மரியாளின் விண்ணக மகிமையை நினைவூட்டுகிறது. ஆனால் அவர் தொலைவில் இருக்கும் அரசி அல்ல; தன் பிள்ளைகளுக்காகப் பரிந்துரைக்கும் தாய்.

பன்னிரண்டு விண்மீன்களின் கிரீடம்

மரியாளின் தலையில் காணப்படும் பன்னிரண்டு விண்மீன்கள் முதலில் இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரங்களைக் குறிக்கின்றன. ஆனால் வெளிப்படுத்தல் நூலில் பன்னிரண்டு என்ற எண் புதிய அர்த்தத்தையும் பெறுகிறது. அது கிறிஸ்துவின் பன்னிரண்டு திருத்தூதர்களையும் குறிக்கிறது. அவர்கள் புதிய இஸ்ரயேலான திருச்சபையின் அடித்தளமாக இருக்கிறார்கள்.

எனவே மரியாளின் கிரீடம் இரண்டு உலகங்களை இணைக்கிறது:

- பழைய உடன்படிக்கையின் இஸ்ரயேல்
- புதிய உடன்படிக்கையின் திருச்சபை

அவர் பழைய ஏற்பாட்டின் நிறைவும், புதிய ஏற்பாட்டின் துவக்கமும் ஆவார். மரியாளின் வாழ்க்கை ஒரு பயணமாக இருந்தது — நாசரேத்தின் அமைதியிலிருந்து கல்வாரியின் கண்ணீருக்கு, அங்கிருந்து விண்ணக மகிமைக்கு.

அவரது விண்ணேற்றம் நமக்கு ஒரு வாக்குறுதி:

‘‘கடவுளோடு வாழ்ந்தவர்கள் இறுதியில் கடவுளோடு மகிமையில் வாழ்வார்கள்.’’

தாயின் உடல் — உயிருள்ள ஆலயம்

## உயிருள்ள உடன்படிக்கைப் பேழை

மரியாளின் பிறப்பை திருச்சபை ஏன் இவ்வளவு மகிழ்ச்சியோடு கொண்டாடுகிறது? ஏனெனில் உலகின் மீட்பர் வருவதற்கு முன், அவரைத் தாங்கும் ‘‘உயிருள்ள உடன்படிக்கைப் பேழை’’ உலகிற்கு வழங்கப்பட்டது. பழைய ஏற்பாட்டில் உடன்படிக்கைப் பேழை தங்கத்தால் அலங்கரிக்கப்பட்டு, இறைவனின் சந்நிதி தங்கிய இடமாகக் கருதப்பட்டது. ஆனால் மரியாள் தனது கருவறையில் இறைவனுடைய வார்த்தையை மாம்சமாகத் தாங்கியபோது, அவர் புதிய உடன்படிக்கைப் பேழையாக மாறினார். எனவே மரியாளின் பிறப்பு என்பது இறைவன் தம் ஆலயத்தை உலகில் அமைக்கத் தொடங்கிய நாள். மனித உடல், மனித இதயம், மனித வாழ்க்கை ஆகியவை மீண்டும் இறைவனின் வாசஸ்தலமாக மாற முடியும் என்பதை அவரது பிறப்பு அறிவிக்கிறது.

பழைய ஏற்பாட்டில் உடன்படிக்கைப் பேழை மிகவும் பரிசுத்தமானதாகக் கருதப்பட்டது. அதில்:

- மன்னா
- ஆரோனின் கோல்
- பத்து கட்டளைகள் இருந்தன.

ஆனால் மரியாள் தன் கருவில்:

- உயிருள்ள மன்னாவை
- கடவுளின் ஒரே மகனை
- உயிருள்ள வார்த்தையைச் சுமந்தார்.

ஆகவே திருச்சபை மரியாளை ''புதிய உடன்படிக்கைப் பேழை'' என்று அழைக்கிறது. அப்படிப்பட்ட பரிசுத்தமான ஆலயத்தைக் கடவுள் அழிவில் விடவில்லை; மகிமைக்குள் ஏற்றுக்கொண்டார்.

### மரியாள் – புதிய சீயோன் மகள்

பழைய ஏற்பாட்டில் ''சீயோன் மகள்'' என்பது கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ரயேல் மக்களைக் குறிக்கும் ஒரு கவிதைமிகு உருவகம்.

எசாயாவில் இறைவாக்கினர் இஸ்ரயேலை ஒரு அழகிய மணமகளாகவும் அரசியாகவும் வர்ணிக்கிறார்:

''ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாகத் திகழ்வாய்;.''

(எசாயா 62:3)

இஸ்ரயேல் என்பது கடவுளின் மணமகள். அவருடைய உடன்படிக்கை அன்பின் பெறுநர். இந்தச் சீயோன் மகளின் எல்லா எதிர்பார்ப்புகளும் மரியாளில் நிறைவேறுகின்றன. ஏனெனில் இஸ்ரயேல் பல நூற்றாண்டுகளாக எதிர்பார்த்த மீட்பர் மரியாளின் கருவில் பிறந்தார். எனவே மரியாள் ஒரு தனி நபராக மட்டும் அல்ல; அவர் முழு இஸ்ரயேலின் விசுவாசத்தைத் தன்னுள் தாங்கியவர். இஸ்ரயேலின் நம்பிக்கை, காத்திருப்பு, எதிர்பார்ப்பு அனைத்தும் மரியாளின் ''ஆம்'' என்ற பதிலில் நிறைவேறுகின்றன.

### சிலுவையின் அடியில் பிறந்த தாய்மை

இந்த உண்மை சிலுவையின் அடியில் தெளிவாக வெளிப்படுகிறது.

இயேசு மரியாளை நோக்கி:

''பெண்ணே, இதோ உன் மகன்.''

என்றும்,

அன்புச் சீடரை நோக்கி:
‘‘இதோ உன் தாய்.’’
(யோவான் 19:26–27)
என்றும் கூறுகிறார்.
இங்கே யோவான் தனிநபராக மட்டுமல்ல; அனைத்து சீடர்களின் பிரதிநிதியாக நிற்கிறார்.
எனவே சிலுவையின் அடியில் மரியாள் புதிய மனிதகுலத்தின் தாயாக அறிவிக்கப்படுகிறார். திருவெளிப்பாடு 12 –10 இல் ‘‘நம் சகோதரர் சகோதரிகள்’’என்று குறிப்பிடப்படுபவர்கள், சிலுவையின் அடியில் மரியாளிடம் ஒப்படைக்கப்பட்ட விசுவாசிகளே.

**‘‘மௌனம் பேசும் தாய்’’**

மரியாளைப் பற்றி நற்செய்தி மிகக் குறைவாகவே பேசுகிறது. ஆனால் அவர் பேசாத இடங்களே மிக ஆழமானவை.

- பெத்லகேமின் இரவு
- எகிப்திற்கான அகதி பயணம்
- பன்னிரண்டு வயதில் இயேசுவைத் தேடிய துயரம்
- சிலுவையின் அடியில் நின்ற அமைதி

இந்த எல்லா தருணங்களிலும் மரியாள் அதிகமாகப் பேசவில்லை; ஆனால் அவரது இருப்பே ஒரு ஜெபமாக இருந்தது.
‘‘மௌனமே இருப்பின் மொழி.’’ மரியாள் இந்த மௌனத்தின் உருவமாகப் பார்க்கப்படலாம்.
மரியாள்:

- அகங்காரம் இல்லாத ஆன்மா
- தெய்வீகத்திற்கு திறந்த இதயம்
- அமைதியின் கருப்பை
- அன்பின் ஆலயம்
- சரணாகதியின் இன் முழுமையான உருவம் ஆகிறார்.

‘‘உண்மை பேசப்படுவதில்லை; அது வாழப்படுகிறது.’’
இந்தப் பார்வையில் மரியாளின் வாழ்க்கை ஒரு தியானம் போலத் தோன்றுகிறது. அவர் அதிகமாகப் போதிக்கவில்லை, விவாதிக்கவில்லை, தன்னை உயர்த்திக்கொள்ளவில்லை. ஆனால் அவரது அமைதியான இருப்பு தெய்வீகத்தை உலகிற்குள் வரவழைத்தது.

மரியாளிடம் பழைய உடன்படிக்கையையும் புதிய உடன்படிக்கையையும் ஒன்றிணைக்கின்றன. அவரது கருவில் பிறந்த கிறிஸ்து உலகின் மீட்பர்; அவரது மற்ற பிள்ளைகள் நாம் அனைவரும். எனவே மரியாளின் விண்ணேற்றம் நமக்குச் சொல்லும் செய்தி:
**‘‘மரியாளில் மகிமை பெற்றது ஒரு பெண் மட்டுமல்ல; கடவுளுக்கு விசுவாசமாக வாழும் முழு மனிதகுலத்தின் எதிர்காலமே ஆகும்.’’**

-----------------------------------